[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவகச் சட்டம்*

---

[*1999, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


*1999, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக்** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை: ரூபா 20. 25** **தபாற் செலவு : ரூபா 5 . 25**

## 1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவகச்சட்டம்

[*1999 ஒற்றோபர் மாதம் 07 ஆம் திககி அத்தாட்சிப்படுத்தப் பட்டது*]

*ச.வ. - ஒ. 34/98*

**கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவகமொன்றைத் தாபிப்பதற்கும், அதனோடு தொடர்பு பட்ட அல்லது அதன் இடைநேர்விளைான கருமங் களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

*சடற்றொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடுவதற்கு உத்தேசித்துள்ள ஆட்களின் தொழிநுட்ப, முகாமைத்துவ நுட்பங்களை உயர்த்தும் நோக்கத்துக்காக நிறுவகமொன்றைத் தாபிப்பது அவசியமானதாகவுள்ளதாதலாலும் :* *முன்னுரை.*

*அத்துடன் இதனகத்துப்பின்னர் தாபிக்கப்படும் நிறுவகம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமொன்றாகவிருக்குமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றதாதலாலும் :*

*ஆகவே, இப்பொழது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்திழுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

***1***. *இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடி யவாறான (இதனக்த்துப்பின்னர் நியமிக்கப்பட்ட தேதி எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.* *சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

### பாகம் I

### கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவகத்தைத் தாபித்தல்

***2***. *(1) (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவகம் என அழைக்கப்படவேண்டிய நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.* *கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவகத்தைத் தாபித்தல்.*

(2) நிறுவகமானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித் தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு, இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதான கூட்டிணைக்கப் பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரைக்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*நிறுவகத்தின் பணிகள்.*

**3**. நிறுவகத்தின் பணிகள் பின்வருமாறாதல் வேண்டும் :-

(அ) கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடுவ தற்கு உத்தேசித்துள்ள ஆட்களின் தொழிநுட்ப, முகாமைத்துவ நுட்பங்களை உயர்த்தும் நோக்குடன் கடற்றொழிலிலும் கடலோட்டு எந்திவியலிலும் ஆன கற்கைநெறிகளையும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தல் ;

(ஆ) சான்றிதழ்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் திறமைகள் என்பவற்றை அளிப்பதற்கு இட்டுச்செல்லும் வகையில் கற்கைநெறிகளையும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏற்பாடுசெய்தல் ;

(இ) தேசிய, சர்வதேச ஒழுங்கமைப்புக்களின் உதவியுடன் கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியற் றுறையிலான கல்விபற்றிய மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் ஆய்வரங்குகளையும் நடாத்து தல் அல்லது நடாத்துவதற்கு ஒழுங்குசெய்தல் ;

(ஈ) கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியற் றுறைகளிலான கல்விபற்றியும் விசாலிப்புப் பயிற்சிபற்றியும் ஆன ஆராய்ச்சி, ஆய்வுகள், நுண்ணாய்வுகள் என்பவற்றை நடாத்துதல் அல்லது நடாத்துவதனை ஊக்குவித்தல் ;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த அதே குறிக்கோள்களையுடைய, இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ளவையான நிறுவனங்களுடன், ஆசிரியர்களையும் மாணவர்களையும் பரிமாறுவதன் மூலம் அல்லது வேறுவகையாக ஒத்துழைத்தல் ;

(ஊ) அமைச்சர் மதியுரைக்கெனப் போரவைக்கு ஆற்றுப் படுத்தக் கூடியனவையும் கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தொடர்பானவையுமான அத்தகைய எல்லாக் கருமங்கள் பற்றியும் அவருக்கு மதியுரை அளித்தல்.

நிறுவகத்தின் தத்துவங்கள்.

**4**. நிறுவகமானது, அதன் பணிகளை ஆற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களை உடையதாதல் வேண்டுமென்பதுடன், குறிப்பாக அது –

(அ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காக நிலையங்களையும், நூலகங்களையும், ஆய்வுகூடங்களையும் மற்றும் வேறு வசதிகளையும் நிறுவலாம், அவற்றுக்குச் சாதனமிடலாம் அத்தடன் அவற்றைப் பேணலாம் ;

(ஆ) நிறுவகத்தின் பணிகளையொத்த அதே பணிகளை ஆற்றுகின்ற வேறு தேசிய, சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்பதற்கான உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம் ;

(இ) இயைபான துறைகளில் நிறுவகத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயிற்சிபெறுநர்களுக்குப் பயிற்சியளிப்பதற்குத் தொதுழில் தருநர்களுடன் உடன்படிக்கைகளைச் செய்துசொள்ளலாம் ;

(ஈ) நிறுவகத்தின் பணிகளை ஆற்றுவதற்கு அவசியமானவாறான அத்தகைய அலுவலர்களை அல்லது சேவையாளர்களை நியமிக்கலாம். தொழிலுக் கமர்த்தலாம். அவர்களுக்கு ஊதியமளிக்கலாம், அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம், அத்துடன் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம் ;

(உ) நிறுவகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட கற்கைநெறிகளுக்காகவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் கட்டணங்களை அல்லது வேறெவையேனும் கொடுப்பவைகளை விதிக்கலாம் ;

(ஊ) ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளலாம், வைத்திருக்கலாம், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கலாம் அல்லது கொடுக்கலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம் அத்துடன் விற்கலாம் அல்லது வேறுவகையாகக் கையுதிர்க்கலாம் ;

ஆயின், நிறுவகத்தின் அசைவற்ற ஆதனமெதுவும், அமைச்சரின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றிக் கையுதிர்க்கப்படுதலாகாது ;

(எ) ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறந்து பேணலாம் ;

(ஏ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிட மிருந்து மானியக்கொடைகளை, கொடைகள் அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளலாம் ;

(ஐ) நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர் களினதும் நன்மைக்காகச் சகாய நிதியத் திட்டங்களை அல்லது ஓய்வூதியத் திட்டங்களைத் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் திட்டத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்தலாம் ;

(ஒ) நிறுவகத்தின் எவையெனும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பேரவையின் உறுப் பினர்களுக்கு அல்லது நிறுவகத்தின் பணிப்பாளர் தலமையதிபதிக்கு அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம் ;

(ஓ) மதியுரைசார் பணிகளைப் பொறுப்பேற்கலாம் ;

(க) கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் என்பவற்றிலான கற்கைநெறிகளையும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தலாம் ;

(ங) அத்தகைய கற்கைநெறிகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றுக்கான பாடவிதானங்களைப் பரிசீலித்து மீளாய்வு செய்யலாம் ;

(ச) கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் பற்றிய கல்வி விடயதானங்களை வெளியிடலாம் ;

(ஞ) அத்தகைய கற்கைநெறிகளுக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளையும் நடவடிக்கை முறைகளையும் தருகின்ற விதிகளையாக்கலாம் ;

(ட) அத்தகைய கற்கைநெறிகளினால் அல்லது பயிற்சி நிகழ்சித்திட்டங்களினால் மேவப்பட்ட கற்கைத் துறைகளில் தேர்ச்சி எய்தியுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கத்துக்காகப் பரீட்சைகளை நடாத்தலாம் ;

(ண) அத்தகைய கற்கைநெறிகளை அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பின்பற்றி இயைபான பரீட்சைகளில் தேறியுள்ள ஆட்களுக்குத் திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் திறமைகள் என்பவற்றை அளிக்கலாம் ;

(த) நிறுவகத்தின் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள், சிறப்புப் பரிசில்கள், பணவுதவிகள், பதக்கங்கள், மற்றும் பரிசுகள் என்பவற்றை அளிக்கலாம் ;

(ந) நிறுவகத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் ஒழுக்காற்றை ஒழுங்குபடுத்தி அதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம் ;

(ப) அதன் பணிகளை ஆற்றுவதற்கு அவசியமாக விருக்கக்கூடியவாறான அல்லது அதன் இடைநேர் விளைவான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்யலாம்.

நிறுவகத்தின் நிருவாகம் பேரவைக்கு உரித்தாக்கப்படுதல்.

**6**. *(1)* நிறுவகத்தின் அலுவல்களினது நிருவாகமும், முகாமையும் கட்டுப்பாடும், (இச்சட்டத்தில் “பேரவை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிறுவகத்தின் ஆளும் பேரவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

*(2)* பேரவையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலும், ஆற்றுதலும், புரிதலும் வேண்டும்.

பேரவையின் அமைப்பு

**6**. *(1)* பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பதவிவழி உறுப்பினர்கள், அதாவது :-

(i) கடற்றொழில், நீர்வாழ் வளங்கள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ii) கல்வி மற்றும் உயர்கல்வி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(iii) நிதி, திட்டமிடல் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(iv) கப்பற்றொழில் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(v) 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வாழ்வளச் சபையின் தவிசாளர் ;

(vi) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப் பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பிரதிநிதியொருவர் ;

(vii) 1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் தவிசாளர் அல்லது அவரது பிரதிநிதி அத்துடன் ;

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழிற்றுறையில் அனுபவம் பெற்றுள்ளவர்களான அல்லது தகைமைகளை உடையவர்களான அல்லது திறமை காண்பித்துள்ளவர்களான ஆட்களிடையேயிருந்து தொவுசெய்யப்பட்டு அமைச்சரினால் நியமிக்கப் படுபவர்களான எட்டு உறுப்பினர்களுக்கு மேற் படாதோர்.

(2) அடிமச்சரானவர், பேரவையின் உறுப்பினர்களுள் ஒருவரைப் பேரவைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(3) பாராளுமன்ற உறுப்பினரொருவர் அல்லது மாகாண சபை உறுப்பினரொருவர், பேரவையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராக்கப்படுதல் வேண்டும்.

(4) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயுள்ளவிடத்து, 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அவரினிடத்திற் செயலாற்றவென இன்னோராள் நியமிக்கப்படலாம்.

(5) பேரவையின் அடுத்தடுத்து நடைபெறும் மூன்று கூட்டங்களுக்கு அனுமதியின்றி வருகைதாரதிருக்கும் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், அத்தகைய கூட்டங்களின் கடைசிக் கூட்டத்தின் தேதியிலிருந்து பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

*அலுவலர்களின் பதவிக்காலம்.*

**7**. *(1)* பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், 6ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகாலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) அமைச்சர் அதற்கெனக் குறித்துரைக்கப்படும் காரணத்திற்காக பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் எந்நேரத்திலும், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம் ஒன்றின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் இறப்பினால், பதவி விலகலினால், பதவியிலிருந்து அகற்றப்படுவதினால் அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்குவதன் விளைவாக பேரவையின் உறுப்பாண்மையில் வெற்றிட மொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில், 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறொரு ஆள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் இறப்பின், பதவிவிலகலின், பதவியிலியிலிருந்து அகற்றப்படுதலின் அல்லது வேறுவகையின் காரணத்தினால் ஏற்பட்ட வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு வேறொரு ஆள் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள ஆள், அவர் பேரவையின் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்கு அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும்.

*பேரவையின் தவிசாளர்*

**8**. *(1)* பேரவையின் தவிசாளர் எந்நேரத்திலும் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதமூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்.

(2) அமைச்சர், ஏந்நேரத்திலும் அதற்கெனக் குறித்துரைக்கப்படும் காரணத்திற்காக தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(3) தவிசாளர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவியின் கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருப்பின், அமைச்சர் பேரவையின் வேறொரு உறுப்பினரை அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென நியமிக்கலாம்.

(4) ஓராம் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம் பேரவையில் அவரது உறுப்பாண்மையின் காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும்.

*நிறுவகத்தின் இலச்சினை.*

**9**. நிறுவகத்தின் இலச்சினை

(அ) பேரவை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் அத்துடன்;

(இ) பேரவையின் அனுமதியுடனன்றியும் தவிசாளரினதும் பேரவை உறுப்பினர் ஒருவரினதும் அல்லது தவிசாளரினதும் நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் அல்லது பேரவையின் இரு உறுப்பினர்ளினதும் முன்னிலையில் அன்றியும் ஏதேனும் ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது அவர் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அவ்வாவணத்தில் ஒப்பமிடல் வேண்டும்.

*பேரவையின் கூட்டங்கள்.*

**10**. (1) தவிசாளர் அல்லது அவர் வருகைதராதவிடத்து சமூகமாயிருக்கும் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) பேரவையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் பேரவையின் ஐந்து உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் தீர்மானத்திற்கான எல்லா வினாக்களும் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும், வாக்குகள் சமமாயிருக்கும் விடயத்தில் பேரவையின் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது வேறு எவரேனும் உறுப்பினர் தமது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது அதன் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பான நடைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

*பேரவையின் உறுப்பினர்களின் ஊதியம்.*

**11**. பேரவையின் உறுப்பினருக்கு, நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையின்மீது அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் அத்தகைய ஊதியம் வழங்கப்படல் வேண்டும்.

*கல்விசார் சபை.*

**12**. (1) நிறுவகத்தின் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) கல்விசார் சபை ஒன்று இருத்தல் வேண்டுமென்பதுன், அத்தகைய சபையானது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(i) நிறுவகத்தின் தவிசாளர் ;

(ii) நிறுவகத்தின் பணிப்பளர் தலைமையதிபதி ;

(iii) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் வளத்துறை அபிவிருத்திப் பணிப்பாளர் ;

(iv) 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க,தேசிய நீர்வாழ் வள அபிவிருத்திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வாழ்வள அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(v) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(vi) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் விலங்கியல் பீடத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(vii) மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கடலோட்டு எந்திரவியல் பீடத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(viii) கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பீடத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ix) உருகுணு பல்கலைக்கழகத்தின் கடற்றொழில் உயிரியல் பகுதியின் துறைத்தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(x) *1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையப் பணிப்பாளர் தலைமையதிபதி ;*

(xi) *1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய தொழில்பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;*

(xii) *மஹபொல பயிற்சி நிறுவகத்தின் பிரதிநிதியொருவர்;*

(xiii) *நிறுவகத்தின் கல்விசார் திணைக்களங்களின் தலைவர்கள்.*

*சபையின் தத்துவங்கள்.*

**13**. *(1)* சபையானது பேரவைக்குப் பொறுப்புக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் தத்துவங்களையும் பண்புகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :-

*(அ)* இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நிறுவகத்தின் கல்விசார் நடவடிக்கைகளுடன் தொடர்பாகக்கூடிய வாறான அத்தகைய கருமங்களில் பேரவைக்கு ஆலோசனையளித்தல் ;

(ஆ) நிறுவகத்தின் விதிகளுக்கிணங்க பரீட்சைகளை நடாத்துதலும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களும் நிறுவகம் விதித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திசெய்துள்ளவர்களுமான ஆட்களை நிறுவகத்தின் திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புப்பட்டங்களையும் பெறுவதற்கு தகுதியானவர்களௌனப் பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(இ) பேரவையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமங்களைச் சீர்தூர்க்கிப்பார்த்தலும் அதன்மீது அறிக்கையிடுதலும் ;

(ஈ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் என்பவற்றுடன் தொடர்புடைய எல்லாக் கருமங்கள் பற்றியும் பேரவைக்கு விதப்புரைகளைச் செய்தலும் அறிக்கையிடுதலும் ;

(உ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் அல்லது பயிற்சித்திட்டகள் மற்றும் பரீட்சைகள் என்பவற்றிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு விதிக்கப்படவேண்டிய தேவைப்பாடுகளை பேரவைக்கு விதித்துரைத்தல் ;

(ஊ) நிறுவகத்தினால் நடத்தப்படும் கற்கைநெறிகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் என்பன தொடர்பிலான விதிகளை ஆக்குதலும் அத்தகைய விதிகளை பேரவைக்குச் சமர்ப்பித்தலும் ;

(எ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் பரீட்சகர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைப் பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) நிறுவகத்தின் கல்விசார் பணியாட்டொகுதியினரின் நியமனம், அவர்களது கூலிகள், ஊதியம், படிகள் மற்றும் கட்டணங்கள், அவர்கள் மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, அவர்களைப் பதவிவிலக்கல் மற்றும் ஓய்வுபெறுகை அத்துடன் அவர்களின் வேலை நேரங்கள், விடுமுறைகள் மற்றும் லீவுகள் நடவடிக்கைமுறைகளைப் பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(ஐ) நிறுவகத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள், சிறப்புப்பரிசில்கள், பணவுதவிகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகளை வழங்குவதற்கு ஏற்புடைத்தாகவேண்டிய நிபந்தனைகளை பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(ஓ) புலமைப்பரிசில்கள், சிறப்புப்பரிசில்கள், பணவுதவிகள், பதக்கங்கள் அளிப்புகள் மற்றும் பரிசுகளுக்குப் பேரவையினால் அங்கீகரிப்பட்ட நிபந்தனைகளை திருப்திசெய்துள்ள ஆட்களை பேரவைக்கு விதந்துரைத்தல் ;

(ஓ) பேரவையின் அங்கீகாரத்துடன், சபையின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள குழுக்களை நியமித்தல் அத்துடன் ;

(ஔ) சபையினதும் சபையின் குழுக்களினதும் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப் படவேண்டிய நடைமுறையை ஒழுங்குபடுத்துதல் தொடர்பிலான விதிகளை ஆக்குதல்.

(2) பேரவை அல்லது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கல்விசார் கருமம் தொடர்பில் எவ்வலுவலருக்குத் தத்துவம் அல்லது பணி கையளிக்கப்பட்டுள்ளதோ அவ் எவரேனும் அலுவலர் அவ்வேதேனும் கருமத்தின்மீது சபையின் விதப்புரையைப் பெறாமல் முடிவு எதனையும் எடுத்தலாகாது, பேரவையின் அல்லது அத்தகைய அலுவலரின் முடிபானது சபையின் விதப்புரைக்கு முரணாகவுள்ளவிடத்து, பேரவை அல்லது அத்தகைய அலுவலர் சபையின் விதப்புரைகளுக்கு அமைந்தொழுகாமைக்கான காரணங்களை எடுத்துரைத்தல் வேண்டும்.

(3) சபையின் செயல், விதப்புரை அல்லது அறிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று உள்ளமை அல்லது அதன் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமை மட்டுமே காரணமாகச் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

(4) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையில் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

## பாகம் II

### நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் நிறுவகத்தின் பணியாட்டொகுதியினதும் நியமனம்

*நிறுவகத்தின் பணிப்பானர் தலைமையதிபதியை நியமித்தல்.*

**14**. (1) அமைச்சர், பேரவையின் விதப்புரையின் மீது, நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு, (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை நியமித்தல் வேண்டும். அவர் நிறுவகத பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி, இறப்பினால், பதவிவிலகலினால், சேவையிலிருந்து ஓய்வு பெறுவதால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதால் ஏலவே பதவியை வறிதாக்கினாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகாலப் பகுதியொன்றிற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி பேரவையின் பொதுவான பணிப்புரைக்கமைய, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் மற்றும் நிறுவகத்தின் பணியாட்டொகுதியைக் கட்டுப்படுத்தும் பொறுப்பைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர் பேரவையின் எல்லா முடிபுகளையும் நிறைவேற்றுவதற்கும் பொறுப்பான வராயிருத்தலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி பேரவையினால் அவருக்குக் கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

(5) பேரவையால், அதன் பொருட்டான வேண்டுகோளொன்றின்மீது, அமைச்சரானவர்,

பணிப்பானர் தலைமையதிபதியை -

(அ) அவர்தம் பதவிக்குரிய கடமைகளை நிரந்தரமாகப் புரிய இயலாதவராகவரின் ; அல்லது

(ஆ) அவர் பேரவையின் அபிப்பிராயப்படி மோசடியான அல்லது சட்ட விரோதமான இயல்பினதான அல்லது நிறுவகத்தின் குறிக்கோள்களுக்கு வெளிப்படையாகவே விரோதமான ஏதேனும் செயலை அல்லது விடயத்தைச் செய்திருப்பின் அல்லது

(இ) பேரவையின் முடிவுகளை அவர் வேண்டுமென்றே நிறைவேற்றத் தவறினால்,

எழுத்துமூலம் பதவியிலிருந்து அகற்றலாம்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியானது அப்பதவியை வகிப்பவரின் இருப்பின்மீது, (5) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மீது அல்லது அதன் பொருட்டு அமைச்சருக்கு முகவரியிட்டு அனுப்பப்படும் கடிதத்தின்மூலம் பதவி துறப்பதன்மீது வறிதாதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் தன் சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலன்றி அல்லது (5) ஆம் பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, பணிப்பாளர் தலைமையதிபதியாக மீண்டும் நியமிக்கப்படுவ தற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

*நிறுவகத்தின் பணியாட்டொகுதி.*

**15**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பேரவையானது நிறுவகத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கான தத்துவமுடையதாதல் வேண்டும்.

*நிறுவகத்திற்கான சேவைகள். குறித்த சில ஒப்பந்தங்களின் நோக்கங்களுக்கு அரசாங்கத் திற்கான சேவைகளாகக் கருதப்படுதல்.*

**16**. ஆளொருவர் எந்த ஒப்பந்தத்தின் மூலம் குறித்துரைக் கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்கு சேவையாற்ற உடன்பட்டுள்ளோரோ அந்து ஒப்பந்தமொன்றை அரசாங் கத்துடன் செய்து கொண்டுள்ள எவரேனும் ஆளை நிறுவகம் தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து அவ்வாளினால் நிறுவகத்திற் கான ஏதேனும் சேவைக்காலம் அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக அரசாங்கத் திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களின் நியமனம்.*

**17.** (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பொது நிர்வாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் அந்த அலுவலரினதும் சம்மதத்துடன் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக அதே போன்ற சம்மதத்துடன் நிறுவகத்தால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கு நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப் படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவதல் வேண்டும்.

*கடற்றொழில் நீர்வாழ் வளத்துறை அமைச்சின் தேசிய கடற்றொழிற் பயிற்சி நிறுவகத்தின் பகிரங்க அலுவலர்களால் வழங்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்ட அறிவித்தல்.*

**18.** (அ) கடற்றொழில், நீர்வாழ் வளத்துறை அமைச்சின் தேசிய கடற்றொழிற் பயிற்சி நிறுவகத்தின் (இப்பாகத்தில் "தே.க.ப.நி." எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசாங்கத்தின் இடமாற்றத்திற்குரிய சேவையிலுள்ளவாறான அத்தகைய எவரேனும் அலுவலரல்லாத பகிரங்க அலுவலர் ஒவ்வொருவரும் இச்சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் தேதியின் பின்னர் ஆனால் நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர், கடற்றொழில் நீர்வாழ் வளத்துறை அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு, அத்தகைய அலுவலர் நியமிக்கப்பட்ட தேதியன்று

(i) அவர் "தே.க.ப.நி" யின் ஓய்வூதியத்திற்குரிய அலுவலரொருவராக இருந்து அத்தேதியன்று பத்தாண்டுகளுக்குக் குறையாத ஓய்வூதியத்திற்குரிய சேவையைக் கொண்டுள்ளவராக இருந்திருப்பின் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்று நிறுவகத்தின் ஊழியர் ஒருவராக உத்தேசிக்கின்றார் என அல்லது

(ii) அவர் "தே.க.ப.நி" யின் ஓய்வூதியத்திற்குரிய அலுவலரொருவராக இருந்து, அத்தேதியன்று பத்தாண்டுகளுக்குக் குறையாத ஓய்வூதியத்திற்குரிய சேவையைக் கொண்டுள்ளவராக இருப்பின் பகிரங்க சேவையை விட்டு, நிறுவகத்தின் ஊழியரொருவராக உத்தேசிக்கின்றார் என அல்லது

(iii) அவர் பகிரங்க சேவை சேம இலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை சேம இலாப நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருந்து, பகிரங்க சேவையை விட்டு, நிறுவகத்தின் ஊழியரொருவாக வர உத்தேசிக்கின்றார் என அல்லது

(iv) ஓய்வு பெற்று அல்லது பகிரங்க சேவையை விட்டுவிட்டு நிறுவகத்தின் ஊழியரொருவராக வராதிருக்க உத்தேசிக்கின்றார் என,

எழுத்திலான அறிவித்தலொன்றைக் கொடுத்தல் வேண்டும்.

*(ஆ)* "தே.க.ப.நி" யின் பகிரங்க அலுவலர் ஒருவரால் *(அ)* என்னும் பந்தியின்கீழ் கடற்றொழில், நீர்வாழ் வளத்துறை அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்படும் அறிவித்தலொன்று இறுதியானதாதல் வேண்டும்.

*18 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் வழங்கப்படாததன் பயன்.*

**19**. நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் 18 ஆம் பிரிவின் *(அ)* என்னும் பந்தியின் உட்பந்தி (i), (ii), (iii) அல்லது (iv) என்பதன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலை வழங்காத "தே.க.ப.நி"யின் பகிரங்க அலுவலர் எவரும் அத்தேதியன்று அல்லது அதன்பின்னர் "தே.க.ப.நி" யின் பகிரங்க அலுவலர் ஒருவராகப் பதவியில் தொடர்ந்திருப்பதினின்றும் இல்லாதொழிதல் வேண்டும்.

*18 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்படும் அறிவித்தலொன்றின் பயன்.*

***20.*** *(1) நியமிக்கப்பட்ட தேதிக்குமுன் 18 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் உட்பந்தி* (i)*அல்லது* (ii) *அல்லது* (iii) *அல்லது* (iv) *என்பதன் கீழ் அறிவித்தலொன்றை வழங்குகின்ற "தே.க.ப.நி" யின் பகிரங்க அலுவலர் எவரும் :-*

*(அ) அத்தகைய அறிவித்தல் அப்பந்தியின் () ஆம் உட்பந்தியின் கீழ் அவரால் வழங்கப்படுமிடத்து, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நிறுவகத்தின் ஊழியரொருவராக வருதல் வேண்டும் என்பதுடன் அத்தேதியன்று பகிரங்க சேவையை விட்டு விலகியுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும், அத்துடன் அத்தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்படுவதன் ஏதுவின் மீது அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தால் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறு ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின்மீது ஓய்வூதியமொன்றுக்குத் தகுதியுடையவராதல் வேண்டும் ;அல்லது*

*(ஆ) அத்தகைய அறிவித்தல் பந்தியின்* (ii) *ஆம் உட்பந்தியின் கீழ் அவரால் வழங்கப்படுமிடத்து, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நிறுவகத்தின் ஊழியரொருவராக வருதல் வேண்டும் என்பதுடன், அத்தேதியன்று பகிரங்க சேவையை விட்டு விலகியுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்படுவதன் ஏதுவின்மீது அவர் பகிரங்க சேவையை விட்டு விலகியிருப்பின் அவருக்கு அளிககப்பட்டிருக்கக் கூடியவாறு ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின்கீழ் அத்தகைய அளிப்புக்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.*

*(இ) அவரால் அப்பந்தியின்* (iii) *ஆம் உட்பந்தியின்கீழ் அத்தகைய அறிவித்தல் வழங்கப்படுமிடத்து, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அவர் நிறுவகத்தின் ஊழியரொருவராதல் வேண்டும் என்பதுடன் அப்பகிரங்க சேவை சேம இலாப நிதியத்தின் நோக்கங்களுக்காக, விலக்கப்படுவதன் மீதல்லாமல் வேறுவகையில் அரசாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்தமொன்று முடிவுறுத்தப்படுவதன் மீது அரசாங்க சேவையை விட்டு விலகியுள்ளதாகக்*

கருதப்படுதலும் வேண்டும் ;அல்லது

(ஈ) அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியின்கீழ் அவரால் அத்தகைய அறிவித்தல் வழங்கப்படுமிடத்தும், அத்துடன் -

(i) அவர் அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த பகிரங்க அலுவலரொருவராகவும் இருப்பின், நியமிக்கப்பட்ட தேதியன்று பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்படுவதன் ஏதுவின் மீது அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்திருப்பின் ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவராதலும் வேண்டும் ;அல்லது

(ii) அவர் அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த பகிரங்க அலுவலரொருவராகவும் இருப்பின் நியமிக்கப்பட்ட தேதியன்று பகிரங்க சேவையை விட்டு விலகியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்படுவதன் ஏதுவின் மீது அவர் பகிரங்க சேவையை விட்டு விலகியிருப்பின் ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய அளிப்பொன்றுக்குத் தகுதியுடையவராதலும் மேண்டும் அல்லது

(iii) அவர் அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த பகிரங்க அலுவலரொருவராகவும் இருப்பின் அப்பகிரங்க சேவை சேம இலாப நிதியக் கட்டளைச்

*சட்டத்தின் நோக்கங்களுக்கு நியமிக்கப்பட்ட தேதியன்று விலக்கப்படுவதன் மூலமல்லாமல் வேறுவகையின் அரசாங்கத்தின் சம்மதத்துடன் பகிரங்க சேவையை விட்டு விலகியிருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.*

*(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டிற்குமிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய முரண்பாட்டின் அல்லது ஒவ்வாமையின் அளவுக்கு அத்தகைய வேறு ஏற்பாட்டிற்கு மேலாக மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

*நிறுவகத்தின் குறித்த சில ஊழியர்களுக்கு ஏற்புடைத்தாகும் சிறப்பு ஏற்பாடுகள்.*

***21.*** *பின்வரும் ஏற்பாடுகள், 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறையிலிருப்பதன் பயனாக நியமிக்கப்பட்ட தேதியன்று நிறுவகத்தின் ஊழியரொருவராக வந்துள்ள அத்தகைய ஊழியரொருவருக்கும் அவர் தொடர்பாகவும் எற்புடையனவாதல் வேண்டும் :-*

*(அ) அத்தகைய ஊழியர், அத்தகைய ஊழியராலும் நிறுவகத்தாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடிய வாறான அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது நிறுவகத்தால் தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய நியதி நிபந்தனைகள், அத்தகைய ஊழியர் முன்னர் எந்த நியதி நிபந்தனைகள் மீது "தே.க.ப.நி" யால் தொழிலுக் கமர்த்தப்பட்டாரோ அந்த நியதி நிபந்தனைகளை விடக் குறைந்த சாதகமுடையனவாக இருத்தல் ஆகாது*

*(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய தினத்தன்று அத்தகைய ஊழியர் ஓய்வூயத்திற்குரியதென வெளிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கின்ற "தே.க.ப.நி" யின் பகிரங்க அலுவலரொருவராகவும் அத்துடன் பத்து ஆண்டுகளுக்குக் குறைவானதும் எட்டு ஆண்டுகளுக்குக் குறையாததுமான ஓய்வூதியத்திற்குரிய சேவையை உடையவராகவும் இருந்திருப்பின், அப்போது -*

(i) ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் நோக்கங்களுக்காக மாத்திரம் அவர் அரசாங்கத்தின்கீழ் அவரது ஓய்வூதியத்திற்குரிய சேவையுடன் எந்தக் காலப்பகுதி சேர்க்கப்படும்போது ஓய்வூதியஙத்திற்குரிய பத்து ஆண்டுச் சேவையின் கூட்டுமொத்தமொன்றாகின்றதோ அந்தக் காலப்பகுதி வரை நிறுவகத்தின் கீழான சேவை அத்தகைய கூட்டு மொத்தத்தை கணிப்பிடுவதற்கு அரசாங்கத்தின்கீழ் ஓய்வூதியத்திற்குரிய சேவையாகக் கணிக்கப்படுவதாக நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய தினத்தன்று அவர் "தே.க.ப.நி" யில் பதவி வகிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ii) அவர் தொடர்பில் நிறுவகமானது எந்த சேவைக்காலத்தின்போது ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் நோக்கங்களுக்கு நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய நாளன்று அவர் வகித்த பதவியை அவர் "தே.க.ப.நி" யில் வகித்ததாகக் கருதப்படுகின்றாரோ அந்தக் காலப்பகுதியின் முழுமையான மாதம் ஒவ்வொன்றிற்கும் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுவதற்கென நிறுவகத்தின் நிதியிலிருநது நிதி என்னும் விடயத்தின் பொறுப்பான அமைச்சரால் தீர்மனிக்கக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை திறைசேரியின் பிரதிச் செயலாளருக்குச் செலுத்துதல் வேண்டும்; அத்துடன்

(iii) அத்தகைய காலப்பகுதியின் முடிவில் அவர், பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ஏன்பதுடன் அத்தகைய காலப்பகுதி முடிவுறுவதன் மீது பதவி இல்லாதொழிக்கப்படுவதன் ஏதுவின்மேல் அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருப்பின் ஓய்வூதியங்களின் மீதான குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய ஓய்வூதியமொன்றுக்கு அவர் தகுதியுடையவராதல் வேண்டும்.

## *பாகம்* III

### *நிதி*

*நிறுவகத்தின் தொடக்க நிலை மூலதனம்.*

***22***. (1) நிறுவகத்தின் தொடக்க நிலை, மூலதனமானது, கடற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் வாக்குப்பணத்திகீழ் திறைசேரியால் பிரித் தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளும் பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் அளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளுமாதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் மூலதனம் ஒதுக்கீட்டுச் சட்ட மொன்றினால் அல்லது ஏதேனும் பாராளுமன்றத் தீர்மானத்தினால் அதிகார மளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகைகளினால் காலத்துக்குக்காலம் அதிகரிக்கப்படலாம்.

*நிறுவகத்தின் நிதியம்.*

***23***. (1) நிறுவகம் அதன் சொந்த நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய நிதியத்துக்கு

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்கெனப் பாராளு மன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்

(ஆ) இந்தச் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் ஆகியவற்றைப் பிரயோ கிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் நிறுவகத்தால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்

(இ) எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் என்ற வகையில் நிறுவனத்தால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்களும் ;அத்துடன்

(ஈ) இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அத்தகைய நிதியத்துக்குச் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுவதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்

வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய நிதியத்திலிருந்து –

(அ) இந்தச் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் ஆகியவற்றைப் பிரயோகிக் கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் நிறுவகத்தால் உறப்படும் ஏதேனும் செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன்

(ஆ) இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுவதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

செலுத்தப்படல் வேண்டும்.

**24**. நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *நிறுவகத்தின் நிதியாண்டு.*

**25**. அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிறுவகத்தின் கணக்குளை கணக்காய்வு செய்வதில் ஏற்புடைய தாதல் வேண்டும். *கணக்குகளைக் கணக்காய்வு செய்தல்*

## பகுதி IV

## பொது

**26**. (1) அமைச்சரானவர் கொள்கை விடயங்களுடன் தொடர்புறும் அந்த அளவுக்குப் பேரவையின் தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகள் என்பவற்றை அது பிரயோகித்தல், புரிதல் அத்துடன் நிறைவேற்றுதல் பற்றி எழுத்திலான பொது அல்லது விசேட பணிப்புக்களை பேரவைக்கு வழங்கலாம் என்பதுடன் பேரவையானது அத்தகைய பணிப்புக்களை நிறைவேற்றுதலும் வேண்டும். *அமைச்சரின் பணிப்புரைகள்.*

(2) அமைச்சரானவர், காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் நிறுவத்தின் எல்லா அல்லது எவையேனும் செயற்பாடுகள் நுண்ணாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம். அத்துடன் அத்தகைய கட்டளை செய்யப்பட்டதன் மேல் பேரவையானது அத்தகைய ஆள் அல்லது ஆட்களுக்கு அத்தகைய கட்டளையை பயனுறுத்துவதற்கு அவசியமாகக்கூடியதான அத்தகைய எல்லா வசதிகளையும் கிடைக்கச் செய்தலும் அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(3) பேரவையானது, மூன்றாண்டு வேலைத்திட்டம் ஒன்றையும் நிறுவகத்தின் வருடாந்தத் திட்டம் மற்றும் வேலை நிகழச்சிகள் என்பவற்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகள் ஏற் புடையனவாகாது.*

**27**. 1990 ஆம் ஆண்டின் 20 இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தினதும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 128 ஆம் பிரிவின் ஏற்பாடுகளும் நிறுவகத்திற்கும் நிறுவகம் தொடர்பிலும் ஏற்புடையனவாகாது.

*நிறுவகத்திற்காக காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் அசைவற்ற ஆதனங்களைக் கொள்ளுதல்.*

**28**. (1) நிறுவகத்தின் ஏதேனும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டு அத்துடன் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அந்த நோக்கத்திற்காக உத்தேசிக்கப்பட்ட கைக்கொள்ளளை அங்கீகரிக்குமிடத்து, அவ்வாதனமானது ஒரு பகிரங்க நோக்கத்திற்காகத் தேவைப் படுத்தப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க காணிகொள்ளல் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு நிறுவகத்திற்குக் கைமாற்றவும் படலாம்.

(2) நிறுவகத்திற்காக காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்காகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொகை நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*அரசினது அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை நிறுவகத்திற்குக் கிடைக்கச் செய்தல்.*

**29**. (1) அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், நிறுவகத்தின் நோக்கத்திற்காக நிறுவகத்தால் தேவைப்படுத்தப்பட்டவறான அமைச்சரது அமைச்சின் அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தினை நிறுவகததிற்கு மாற்றலாம் அத்துடன் அவ்வாறு மாற்றப்பட்ட ஏதேனும் ஆதனம், கட்டளையின் தேதியிலிருந்து பயனுறுவதாக நிறுவகத்துக்குரித்தானதாகவும் நிறுவகத்தின் ஆதனமாகவும் வருதல் வேண்டும்.

*நிறுவகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாக கருதப்படுதல் வேண்டும்.*

**30**. நிறுவகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*பேரவையின் உறுப் பினர்கள் மற்றும் நிறுவகத்தின் அலு வலர்கள் சேவை யாளர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.*

**31**. பேரவையின் எல்லா உறுப்பினர்களும் நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்திற்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடி க்கைக்கான பாதுகாப்பு*

**32**. (1) துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும்–

(அ) இச்சட்டத்தின் கீழ் நிறுவகத்தால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக நிறுவகத்திற்கெதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளருக்கு எதிராக,

அமைவதாதலாகாது.

(2) ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையின் நிறுவகத்திற்கு எதிராகக் கொண்டு வரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் நிறுவகத்தால் உறப்படும் எவையேனும் செலவுகள், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என நீதிமன்றம் கொள்ளுமாயின் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவருக்கெதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொள்ளுமாயின், அத்தகைய துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவுகள் அவரால் அறவிடப்பட்டால் ஒழிய, அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பேணல்கள்.

**33**. (1) இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும்

(அ) எவரேனும் பயிற்சி பெறுபவருடன் தேசிய கடற்றொழில் பயிற்சி நிறுவகத்துக்காக அல்லது அதன் சார்பில் அரசாங்கத்தால் செய்து கொள்ளப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன் முன்னரான தேதியில் நிலைத்திருப்பதுமான பயிற்சிக்கான ஒவ்வோர் உடன்படிக்கையும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக, அத்தகைய பயிற்சி பெறுபவருடன் நிறுவகத்தால் இச்சட்டத்தின்கீழ் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ;அத்துடன்

*(ஆ)* தேசிய கடற்றொழில் பயிற்சி நிறுவகத்தினால் ஆக்கப் பட்டதும் அல்லது விதந்துரைக்கப்பட்டதும் நியமிக் கப்பட்ட தேதிக்கு உடன்முன்னராக நிலைத்திருப் பவையுமான எல்லாப் பயிற்சி விதிகளும் நியமங் களும் இந்தச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிக ளாகவும் விதந்துரைக்கப்பட்ட நியமங்களாகவும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கருப்படுதல் வேண்டும்.

**34.** (1) அமைச்சரானவர், எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளானவை இச்சட்டத்தால் ஆக்கப்பட வேண்டு மெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக் கப்பட்டுள்ளதோ அல்லது விதித்துரைக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ ஏதேனும் அக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். *ஒழுங்கு விதிகள்.*

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத் திற்கெனப் பாராளுமன்றத்தின்முன் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கம் செய்யப் பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் செய்யப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கஞ் செய்யப்பட்டதாக அவ்வாறு கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தல் வெளியிடப்படுதல் வேண்டும்.

**35.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பொருள்கோடல்.

**36**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி

"தேசிய கடற்றொழில் பயிற்சி நிறுவகம்" என்பது கடற்றொழில் அமைச்சின் கீழ்த் தொழிற்படும் தேசிய கடற்றொழில் பயிற்சி நிறுவகம் எனப் பொருளாகும் ;

"மாகாணசபை" என்பது அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட மாகாண சபையெனப் பொருளாகும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*